அந்தக் கழிவு நீரால் நிலத்தடி நீரும், வாயு மண்டலமும் பாதிக்கப்படுவதால், அதனுடைய விஷம் கலக்கப் படுவதால், மனிதனுடைய இருதயம், இரத்தம், ஈரல், சிறுநீரகம், மூளை, டைஜஸ்டிவ் சிஸ்டம் போன்றவைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அந்த மனிதனுடைய உடல் நலம் பாதிக்கப்பட்டு, உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை இருப்பதுடன், அங்கே இருக்கும் விலங்குகள், தாவர இனங்கள் பாதிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அவ்வளவு பயங்கரமாக எதுவும் இல்லை. ஆனால் பாதிப்பு இருக்கிறது என்பதை நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன். மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இதைக் கவனித்துக்கொண்டு வருகிறது. மேற்கொண்டு நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக அரசு எடுக்கும்.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் 1974-ல் இந்த ஆலையில் கழிவு நீர் புகை வாயு மண்டலத்தோடு சேருவதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிகிறேன். இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர அவர்களே, தகுந்த நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

(பிற்பகல் 11-20)

(ஊ) அம்பாசமுத்திரம் வட்டம் அரசன்குளத்தில் பள்ளியில்லாதது.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அரசன்குளம் கிராமத்தில் பள்ளிக்கூடம் ஒன்றும் இல்லாமையால் அங்குள்ள குழந்தைகள் சுமார் 2 கி.மீ. தூரம் உள்ள அரியநாயகிபுரத்திற்குச் சென்று படித்து வருவதால் அங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள அரசன்குளம் கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்குவது சார்பாகக் கருத்துரு எதுவும் இதுவரை ஆரம்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படவில்லை. மேற்சொல்லப்பட்டுள்ள அரசன்குளம் கிராமத்தில் புதிய பள்ளி தொடங்குவதற்கான கருத்துரு பெறப்படின், விதிமுறைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு 1987-88 ஆம் ஆண்டு பள்ளி தொடங்குவதற்கான ஆணை வழங்கப்படும். இது குறித்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் தக்க கருத்துரு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1987—88-ஆம் ஆண்டு பள்ளி தொடங்குவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வரும் கல்வி ஆண்டு, ஜூன் மாதத்திலேயிருந்தே தொடங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று ஏற்கெனவே மாவட்ட முதன்மைக் கல்லூரி அதிகாரியிடம் கருத்து கேட்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அதை வரவழைத்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

(எ) சைதாப்பேட்டையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான வசதிகள் இல்லாமை

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இயங்கும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனியாக அங்கீகாரம் வழங்கியும், புதிய கட்டிடங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் மாணவியர்களுக்கு இருக்கை வசதிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள நிலை